

சத்தான உணவு

# 100% இலவச உணவகம்

## புதிய குடியிருப்பைச் சேர்ந்த 13000 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு

மாணவர்களுக்கான உணவகத்தைப் பற்றி மேலும் தகவலுக்கு saintdenis.fr இணைய தளம் அல்லது இந்த QR கோடை ஸ்கேன் செய்யவும்..

Plan Educatif Global

சேந்-தெனிஸ் நகரில் இருக்கும் 0 முதல் 11 வயதிற்குட்பட்ட குழந்தையின் பெற்றோரா?
இந்த QR கோடை ஸ்கேன் செய்து எங்களது சிறப்பு WhatsApp (வாட்ஸப்) சேனலில் இணையவும்!

Saint-Denis

# அன்பான உள்ளூர் வாசிகளே,



***Mathieu Hanotin***
*சேந்-தெனிஸ் நகர மேயர்*



***Michel Fourcade***
*பியர்ஃபித்-ஸ்யூர்-சென் நகர பொறுப்பு மேயர்*



***Leyla Temel***
*சேந் – தெனிஸ் நகர துணை மேயர் – பொறுப்பு கல்வி, குழந்தைகள் நலம், உணவு மற்றும் பள்ளி வாழ்க்கை*



***Abida Haneefa***
*பியர்ஃபித்-ஸ்யூர்-சென் நகர துணை மேயர் – பொறுப்பு கல்வி, கல்வித் தேர்ச்சி, குழந்தைகள் நலம் மற்றும் பள்ளி சார்ந்த வாழ்க்கை.*

மாணவர்களுக்கான இலவச உணவகமானது ஒற்றுமை, பொது சுகாதாரம் மற்றும் குடும்பங்களின் வாங்கும் சக்தியின் மிச் சிறந்த அடையாளமாகும். எங்களது நகராட்சிக் குழுவானது இதைப் படிப்படியாக 2021 ஆம் ஆண்டிலிருந்து நிறுவியுள்ளது. சென்ற ஆண்டிலிருந்து சேந்-தெனிஸ் நகரைச் சேர்ந்த நர்ஸரி பள்ளி மாணவர்களிலிருந்து 2ஆம் நிலை நடுநிலை மாணவர்களுக்கும் பியர்ஃபீத் நகரைச் சேர்ந்த 2ஆம் நிலை நடுநிலை மாணவர்களுக்கும் முற்றிலும் இலவசம்.  இந்த முயற்சியானது, பியர்ஃபீத் நகரைச் சேர்ந்த முதல் நிலை2 மற்றும் நடுநிலை 1 மாணவர்களுக்கும் நீட்டிக்கப் படுகிறது. இவ்வாறாக சேந்-தெனிஸ் நகரைச் சேர்ந்த 13000 மாணவர்கள் பயன் பெறுவார்கள். நாங்கள் இதற்கு மிகவும் பெருமைப் படுகிறோம்.

பொதுக் கல்விச் சேவையின் நீட்டிப்பாக, மதிய நேர ஓய்வு மற்றும் இலவச உணவு இருக்கிறது. இது குடியரசின் பள்ளித்திட்டத்தின் அடிப்படையில் செயல்படுகிறது.

பல பெற்றோர்கள் இதன் அடிப்படையில்  செயல்படத் தொடங்கிவிட்டனர். தங்கள் பெயரைப் பதிந்து, தங்கள் குழந்தைகளின் அனுமதியை உறுதிப் படுத்தும் வகையில் குடும்ப விகிதத்தைக் கணக்கிடத் தொடங்கிவிட்டனர். திட்டத்தை மேலும் சுலபமாக்க, பதிவு மற்றும் பெயர் சேர்ப்பு சுலபமாக்கப்டும் மற்றும் முன் பதிவு செய்யத் தவறினால் விதிக்கப்படும் அபராதமும் ரத்து செய்யப்படுகிறது. முன்பதிவின் பேரில் உணவக அனுமதி இலவசமாகும். தனிப்பட்ட நபர்களுக்கான பின் தொடர்ச்சியை குடும்பத் தொடர்பு மையத்திலோ அல்லது பொழுது போக்கு மைய வரவேற்பறைகளிலோ செப்டம்பர் மாதத்தில் பெறலாம்.. இந்த “உதவி வழங்கும்” மாதத்தில் எந்த உணவிற்கும் உங்களிடமிருந்து பணம் வசூலிக்கப்படமாட்டாது.

சமச்சீர் உணவிற்கும் மேலாக, உணவகமானது சுவை, சரியான முறையில் உணவருந்துதல் மற்றும் நீடித்த முன்னேற்றம், நல்ல பொழுது போக்கு, மற்றவர்களுடன் பழகுதல் மற்றும் பிறருடன் பகிர்ந்து கொள்வதற்கான இடமாகச் செயல்படுகிறது.

இந்த நகரமானது, எனது பொறுப்பான உணவகம் என்று செயல்படவும், மேலும் வீட்டிலேயே ஆர்கானிக் பொருட்களைத் தயாரிக்கத் தூண்டியும் பிளாஸ்டிக் பயன்பாட்டை நிறுத்தவும் முயற்சி செய்கிறது..வாரத்தில் ஒரு முறை மூன்றாவது மரக்கறி உணவைச் சேர்ப்பதன் மூலம் இந்த நகரம் ஒரு சிறந்த உணவை நோக்கியும் சுற்றுச் சூழலை மதிக்கும் வகையிலான உணவை நோக்கிப் பயணிக்கிறது.

இந்தக் கையேட்டில் உணவு நேரத்தைப் பற்றிய அனைத்து விவரங்களும் மற்றும் உங்கள் குழந்தைக்கு உணவகத்தில் முன் பதிவு செய்யும் நடைமுறை பற்றியும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

# 100%இலவச உணவகம்

**2021 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக நிறுவப்பட்ட உணவகம் இந்த 2025-2026 கல்வியாண்டிலிருந்து புதிய குடியிருப்பைச் சேர்ந்த 13000க்கும் மேற்பட்ட பொதுப் பள்ளி மாணவர்களுக்கு இலவசம். இது சேந்-தெனிஸ் நகரைச் சேர்ந்த நர்ஸரி முதல் நடுநிலை2 வகுப்பு வரையிலான மாணவர்களுக்கும் பியர்ஃபித்-ஸ்யூர்-ஸென் நகரத்திலிருக்கும் ஆரம்ப நிலை 2 முதல் நடுநிலை2 வகுப்பு வரையிலான மாணவர்களுக்கும் பொருந்தும்.**



## சேந்-தெனிஸில் இலவசம் என்றால் தரமான உணவு என்று பொருள் பெறுகிறது

**2018 ஆம் ஆண்டிலிருந்து “ எனது பொறுப்பான உணவகம் “ என்ற இயக்கத்தில் ஈடுபட்டுள்ளது. 2வது ‘உணவு நாள்’ எனும் தலைப்பின் கீழே, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 24ஆம் தேதி சேந்-தெனிஸ் நகரில் 2023-2025க்கான அறிக்கை வெளியிடப்படும் மேலும் 2025-2027 காலத்திற்கான புதிய திட்டங்கள் வெளியிடப்படும்.**

இந்த அமைப்பு இயற்கை மற்றும் மனிதனுக்கான ஃபவுண்டேஷன் (la Fondation pour la Nature et l’Homme) மற்றும் ரெஸ்டோகோ ( Restau’Co) தொடர் நிறுவனங்களால் உணவகத் தொழில் நிபுணர்களின் உதவியுடன், ஒரு சுகாதாரமான, தரமான மற்றும் சுற்றுச்சூழலை மதிக்கும் உணவை விரும்புவர்களுக்காக நிறுவப்பட்டது

இதன் நோக்கம்? சேந்-தெனிஸ் நகரில் உணவுச் சூழலை மதிப்பிடுதல் மற்றும் மேன்மைப்படுத்துதல், ஒவ்வொரு இரண்டாண்டிற்கும் புதிய மேன்மையான திட்டங்களைக் கொண்டு வருதல், குறிப்பாக பொருட்களின் தரம் மற்றும் நீடித்திருக்கும் தன்மை, வீணாக்குவதற்கு எதிர்ப்பு மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தைக் குறைத்தல், போன்றவை...

**கான்டீன் செயல்படுவது எப்படி?**
வீடியோவில் (2023):

**48**

உணவகங்கள்புது சமுதாயப் பரப்பில்

**12 000**

சாப்பாடுகள் ஒவ்வொரு நாளும் பள்ளி உணவகங்களிலும் வீட்டிற்கு எடுத்துச் செல்லவும்மற்றும் வயதானவர்களுக்கு வீட்டிலும் வழங்கப்படுகின்றன.

**14,50€**

ஒவ்வொரு குழந்தைக்கும் மதிய இடைவேளைக்கான மொத்த செலவு (உணவு, சேவை மற்றும் பேக்கிங்)

# நன்கு வளர்வதற்கு நன்றாகச் சாப்பிட, ஒரு பொறுப்பான, இலவச உணவகம்.



## தரமான பொருட்கள்

- **இயற்கை முறை வேளாண்மையில் அருகாமையில் கிடைக்கும் பொருட்கள்:** மத்திய சமையலறையில் வாங்கப்படும் பொருட்களில் 30% இயற்கை வேளாண்மையில் தயாரிக்கப்பட்டவை. 12%க்கு மேற்பட்டவை அண்மைப் பகுதிகளிலிருந்து வாங்கப்பட்டவை மற்றும் 50% பொருட்கள் சுற்றுச்சூழல் சான்று பெற்றவை. இது அனைத்து விதப் பொருட்களுக்கும் பொருந்தும்.மத்திய சமையலறையானது பகுத்தறியாத பொருட்களை (தரம் பிரிக்காத பழங்கள்) வாங்குவதில் முதலிடம் பெற்றுள்ளது.

- **விலங்குகளின் நலம்:** 2024ஆம் ஆண்டு அக்டோபர் 5ஆம் தேதி சேந்-தெனிஸ் நகரமானது எடிக்கா  Etica) எனும் விலங்குகளின் நலம் பற்றிய கோட்பாடைப் பிறப்பித்துள்ளது. இதன் நோக்கம் விலங்குகளின் நலம், எல்லா நிலையிலும், வளர்ப்பு, போக்குவரத்து மற்றும் வெட்டுதல் ஆகியவற்றில் பாதுகாக்கப்படுவது

- **அதிகப்படியான “ இல்லத்தில் தயாரிக்கப்பட்டவை” பொருட்கள்:** மத்திய சமையலறையானது குறைவாக மாற்றப்பட்ட பொருட்களைத் தேர்ந்தெடுக்கிறது. இவை உங்கள் உங்கள் குழந்தையின் உடல் நலத்தைப் பாதுகாக்கும் மற்றும் “ இல்லத்தில் தயாரிக்கப்பட்ட” உணவுத் தயாரிப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது.

- **குறைவான பாம் எண்ணை உபயோகம், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க :** குழந்தைகளுக்குத் தரப்படும் பெரும்பாலான பிஸ்கட்டுகள் பாம் எண்ணை கொண்டு தயாரிக்கப்படாதவை என்று உறுதியளிக்கப்பட்டவை.

- **சுற்றுச் சூழல்க் கருத்தில் கொண்ட மாமிசம் மற்றும் மீன்கள் :** கடல் வளத்தைப் பாதுகாக்கும் வகையில் பொறுப்பான முறையில் பிடிக்கப்பட்ட மீன்கள் வழங்கப்படுகின்றன. கோழிகள் விவசாயிகளிடமிருந்து சிவப்பு முச்த்திரை பதிக்கப்பட்வை, அதாவது அவை திறந்த வெளியில் நல்ல விதமாக வளர்க்கப்பட்டதை குறிக்கிறது. ஆடு, மாடு மற்றும் பன்றி இறைச்சி ஃப்ரான்ஸ் நாட்டிலிருந்தே வாங்பப்பட்டவை, பெரும்பாலும் நார்மண்டி பகுதியிலிருந்து வருபவை. அவை தரமான வியாபாரிகளிடமிருந்து பெறப்பட்டவை. (சிவப்பு அல்லது நீல வெள்ளை முத்திரை) கண்டிப்பாக இயற்கை முறையில் வளர்க்கப்பட்டவை.

## சமச்சீர் சத்தான மெனு

- **உணவுத் தேர்வு:** தேர்ந்தெடுக்கப்பட்ட மெனுவின் சத்து சமநிலையை நிர்ணயிக்க ஒரு உணவுச் சத்து நிபுணர் (டயட்டீஷியன்) இருக்கிறார்.

- **மரக்கறி உணவு :** 2024-2025 கல்வியாண்டிலிருந்து சேந்-தெனிஸ் உணவகங்களில்,, வாரம் ஒருமுறை மூன்றாவதாக மரக்கறி உணவு சேர்க்கப்பட்டுள்ளது.. பியர்ஃபித் உணவகங்களில் வாரத்திற்கு இரண்டு முறை மரக்கறி உணவு வழங்கப்படுகிறது. விலங்குகளிலிருந்து கிடைக்கும் புரதச் சத்தைக் கட்டுப்படுத்தி குழந்தைகளின் உடல் நலம் பாதுகாக்கப்படுகிறது.

**மேலும் உணவில் உள்ள கார்பன் பாதிப்பைக் குறைக்கிறது. இந்த நோக்கத்தில், நகராட்சியானது 2024ஆண்டு செப்டம்பர் 25ஆம் தேதி “ பசுமைத் தட்டு “ எனும் மரக்கறி உணவு சங்கத்தால் நிறுவப்பட்ட கோட்பாட்டில் ஒப்பமிட்டுள்ளது.. மெனுவில் தாவரங்களிலிருந்து வந்த உணவுக்கு உத்தரவாதமளிக்கிறது.**

## மதிய நேரம்

- **ஒரு நாளின் முக்கியமான நேரம்:** குழந்தைகளின் தேவைக்கேற்ப நேரத்தைப் பயன்படுத்துவதை எங்கள் குழுவினர் மனதில் கொண்டுள்ளனர்.

## அதிகமான பொறுப்பு

- **உணவு:** சேந்-தெனிஸ் நகரில் நர்ஸரி குழந்தைகளுக்கு 4 வகை மற்றும் ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கு 5 வகையும், குறைவான அல்லது அதிகமான பசிக்காகத் திட்டமிடப்பட்டுள்ளன. பியர்ஃபித்-ஸ்யூர்-ஸென்னில் நர்ஸரி மற்றும் ஆரம்ப நிலை குழந்தைகளுக்கு 4 வகையாகத் திட்டமிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழந்தையின் தேவை மற்றும் பசியைப் பொறுத்து அளவு நிர்ணயிக்கப்படுகிறது. குழந்தை வரும்பினால் மேலும் உணவை எடுத்துக் கொள்ளலாம்
- **குறைவான பிளாஸ்டிக் உபயோகம்:** குழந்தைகளுக்கான உணவை மேலும் திடமாக்க நகராட்சி உபயோகித்தபின் எரியப்படும் பிளாஸ்டிக் உபகரணங்களை விடுத்து எவர்சில்வர் உபகரணங்களை 2026 கோடையிலிருந்து புழக்கத்தில் கொண்டு வர இருக்கிறது. இது குழந்தைகளின் உணவுத் தட்டு உற்பத்தியில் கார்பன் வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்தி உணவுக் கழிவுகளையும் குறைக்கிறது.
- **உணவை வீணாக்குவதைக் குறைப்பது.** புதிய சமுதாயத்தில் உள்ள உணவகங்கள் உணவுப் பொருட்களை வீணடிப்பதற்கு எதிராக செயல்பட முடிவு செய்துள்ளன.



இது பல விதமான நடவடிக்கைகளால் செயல்படுத்தப்படுகிறது :

> மிகுந்து போன பொருட்கள், எங்கெல்லாம் முடியுமோ, உணவில்லாதவர்களுக்காகப் போராடும், சேந்-தெனிஸின் ஒற்றுமை இல்லம், எக்ஸலான்ட் எக்ஸதாந், போன்றவற்றிற்குக் கொடுக்கப்படுகின்றன. அதை சங்கங்கள் மிகவும் சிரமப்படுவோருக்கு இலவசமாக விநியோகிக்கின்றன.

> அலுவலக மற்றும் செயல்பாட்டு ஊழியர்கள் தினந்தோறும் உணவுப் பொருள் வீணாவதற்கு எதிரான திட்டங்களையும் நிலையான முன்னேற்றத்திற்கான வழிமுறைகளையும் வகுத்து செயல்படுத்த முயற்க்கின்றனர். இந்த முயற்சியில் நெறிமுறை, சுற்றுச்சூழல் மற்றும் கல்வி கோணங்கள் இணைகின்றன.

> 2016 இலிருந்து, உணவகங்களில் ஏற்படும் உணவப் பொருள் வீணைத் தவிர்க்க, நகராட்சி ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது. அதன்படி நபருக்குச் சராசரியாக ஏற்படும் வீண் 140 கிராமிலிருந்து 74 கிராமாக்கப்பட்டுள்ளது. அதாவது 47% குறைப்பு. திட்ட நோக்கமானது 2027ஆம் ஆண்டிற்குள் இது 50% குறைய வேண்டும்.

> உண்ணப்படாத, உபயோகிக்கப்படாத ரொட்டித் துண்டுகள் சேகரிக்கப்பட்டு உலரவைக்கப்பட்டு, தூள் செய்யப்படுகின்றன. இது மத்திய சமையலறை சமையற்காரர்களால் Gaspichoc. செய்யப் பயன்படுத்தப்படுகிறது. குழந்தைகளால் விரும்பப்படும் இந்த பண்டம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. .

> மற்ற கழிவுகள் சூயஸ் நிறுவனத்தின் மூலம் Plaine Commune ஆல் பதப்படுத்தப்பட்டு பயோகியாஸ் மற்றும் உரமாக மாற்றி மண்ணுக்கே திருப்பப்படுகிறது.

**பள்ளி உணவகம் பற்றி மேலும் அறிந்து கொள்ள:**

### பியர்ஃபித்-ஸ்யூர்-ஸென்னில் பள்ளி

**பியர்ஃபித்-ஸ்யூர்-ஸென்னில் உள்ள 10 பள்ளி சமையலறைகளிலும் வழங்கப்படும் மற்றும் உதவி தேவையானோருக்கு வீடுகளில் தரப்படும் உணவு Stains-Pierrefitte ஐச் சார்ந்த Syndicat Intercommunal à Vocations Multiples (SIVOM) ஆல் விநியோகிக்கப்படுகிறது.**

SIVOM தினந்தோறும் 2200 சாப்பாடுகளை விநியோகிக்கிறது. 26% சுற்றுச்சூழல் சார்ந்த தரமான உணவு வழங்கத் திட்டம்.உள்ளது. அதில் 22% இயற்கை விவசாயத்திலிருந்தும் வாரத்திற்கு ஒரு முறை மரக்கரி உணவும் இருக்கும்

2025-2026 கல்வியாண்டிலிருந்து புது சமுதாயத்தைச் சேர்ந்த நிலையான உணவு மேற்பார்வைக் குழுவினரால் உணவுப் பொருள் வீணாவதைக் கட்டுப்படுத்த வழிமுறைகள் கண்டுபிடிக்கப்படும்.

**நகராட்சியின் நோக்கம் ஒரு சுகாதாரமான, நிலையான, தரமான உணவு வழங்குவதாகும்.**

# பள்ளி உணவகத்திற்குக் கட்டாய முன் பதிவு

**சேந்-தெனிஸில் உள்ள பள்ளிகளில் பதிவு பெற்ற அனைத்து நர்ஸரி மற்றும் ஆரம்ப நிலை மாணவர்களுக்கு மற்றும் பியர்ஃபித்-ஸ்யூர்-ஸென்னில் உள்ள பள்ளிகளில் பயிலும் ஆரம்ப நிலை 1 மற்றும் ஆரம்ப நிலை 2 மாணவர்களுக்கு உணவகம் முற்றிலும் இலவசம். உணவு வீணாவதைத் தவிர்க்கவும் சரியான வகையில் பேக்கிங் செய்யவும் பள்ளி உணவகத்தில் முன் பதிவு கட்டாயம். அதே போல, குடும்ப விகிதாசாரத்தைக் கணக்கிடுவதும், தனிப்பட்ட தேவைப்படி உதவி பெறும் மாணவர்கள் உட்பட Protocole d'accueil individualisé (PAI) கட்டாயம்.**



## எப்படி முன் பதிவு செய்வது?

- **நான் முழு வருடத்திற்கும் முன் பதிவு செய்கிறேன்**

**நான் ஒரு முறை மட்டும் பதிகிறேன்:**

> **saintdenis.fr** தளத்தில் தொடர்பு கொண்டு (தலைப்பு « démarches »பிறகு s « enfance »).

> **பேப்பர் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து (குடும்ப நல மையம், நகராட்சி அலுவலகம் அல்லது உங்கள் பொழுது போக்கு மையத்தில் கிடைக்கும்) அவற்றை குடும்ப நல மையம் அல்லது நகராட்சி அலுவலகத்தில் கொடுக்க வேண்டும்.**

- **என் தேவைக்கேற்பப் பதிவு செய்கிறேன், மாற்றம் செய்கிறேன் அல்லது ரத்து செய்கிறேன்**

> saintdenis.fr தளத்தில் தொடர்பு கொண்டு (தலைப்பு « démarches »பிறகு s « enfance »). குறைந்த பட்சம் உணவு நாளுக்கு மூன்று நாட்கள் முன்னால் (வரும் வியாழக் கிழமைக்கு முதல் திங்கட் கிழமை)

> பேப்பர் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து (குடும்ப நல மையம் அல்லது உங்கள் பொழுது போக்கு மையத்தில் கிடைக்கும்) அவற்றை குடும்ப நல மையம் அல்லது நகராட்சி அலுவலகத்தில் குறைந்த பட்சம் உணவு நாளுக்கு 8 நாட்கள் முன்னதாகக் கொடுக்க வேண்டும் (திங்கள் முதல் வெள்ளி வரை)

- **நான் முன் பதிவு செய்துள்ளேன் ஆனால் குழந்தை பள்ளிக்குச் செல்லவில்லை அல்லது நான் பதிவு செய்யவில்லை ஆனால் என் குழந்தை உணவகத்தில் உணவருந்தியுள்ளான்.**

முன்பதிவு இல்லாமலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் உணவு கிடைக்கும். பதிவு செய்ய அல்லது ரத்து செய்ய அவகாசம் மதிக்கப்படாவிட்டால் ஒரே மாதத்தில் நான்காவது முறைக்குமேல் கட்டணம் (குடும்ப விகிதாசாரத்தைப் பொறுத்து) வசூலிக்கப்படும்.

### உங்களுக்கு உதவ

குடும்ப நல மையங்களில் saintdenis.fr இணைய தளத்தில் பதிய உங்களுக்கு உதவ பல உதவியாளர்கள் இருக்கின்றனர்.

**Guichets Familles (குடம்ப நல மையம்)**

Direction de l'enfance (குழந்தைகள் பிரிவு)

> 39 bis, rue de Strasbourg
93200 Saint-Denis
**01 49 33 70 94**

> 2, place de la Libération
93380 Pierrefitte-sur-Seine
**01 72 09 36 42**

**சேந்-தெனிஸில் நர்ஸரி முதல் ஆரம் நிலை வரை படிக்கும் மற்றும் பியர்ஃபித்-ஸ்யூர்-ஸென்னில் ஆரம்பநிலை 2 மற்றும் நடுநிலை 2 படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் :**

| பதிவு செய்யவோ ரத்து செய்யவோ காலக் கெடுவை மீறினால் கட்டணம் எவ்வாறு | | **பணம் செலுத்துபவர்** (குடும்ப விகிதாசாரப் படி) | இலவசம்* |
|---|---|---|---|
| இந்த மாதத்தில் நான் முன் பதிவு செய்திருந்தாலும் கழந்தை உணவகத்தில் சாப்பிடவில்லை | **முதல் முறை** | | ✕ |
| | **இரண்டாம் முறை** | | ✕ |
| | **மூன்றாம் முறை** | | ✕ |
| | **4 முறையிலிருந்து** | ✕ | |
| பதிவு செய்திருந்தேன் ஆனால் என் குழந்தை சாப்பிடவில்லை. அவன் வரமாட்டான் என்று 8 நாட்களுக்கு முன்பே குடும்ப நல மையம், நகராட்சி அல்லது saintdenis.fr, மூலம் தெரிவித்து விட்டேன். | | | ✕ |
| இந்த மாதத்தில் நான் பதிவு செய்யாமலே குழந்தை சாப்பிட்டு விட்டான். | **முதல் முறை** | | ✕ |
| | **இரண்டாம் முறை** | | ✕ |
| | **மூன்றாம் முறை** | | ✕ |
| | **4வது முறையிலிருந்து** | ✕ | |
| எனது குழந்தை உணவகம் மூடியிருந்ததால், எனது குழந்தை செயல் முறை வகுப்பில் இருந்ததால் அல்லது ஆசிரியர் வராத உணவகத்தில் உணவருந்த முடியவில்லை. | | | ✕ |

## மொத்தக் கட்டணம்

**கட்டண விகிதம் பொழுது போக்கு மையத்தில்** (குடும்ப விகிதாசாரப் படி)

# மத்திய சமையலறை

**சேந்-தெனிஸ் நகரமானது குழந்தைகளுக்கு கான்டீன் / உணவகங்களில் வழங்கப்படும் உணவைத் தீர்மானித்து, தயார் செய்து, விநியோகிக்கிறது. ஒவ்வொரு நாளும், சுமார் 9800 சாப்பாடுகள் சமுதாய மத்திய சமையலறையில் தயாரிக்கப்படுகின்றன. வயதான நபர்களுக்கு அவர்கள் இல்லத்திற்கு, சிறு குழந்தைகள் காப்பகம் மற்றும் உதவி தேவைப்படுபவர்களுக்கு அவர்கள் இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.**

நிலையான உணவு மையத்தின் மேலாண்மை SIVOM Stains-Pierrefitte இன் மத்திய சமையலறையுடன் செயல்பட்டு 2200 சாப்பாடுகளை தினமும் பியர்ஃபித்தில் வசிக்கும் குழந்தைகளுக்கும் வயதான பெரியோருக்கும் வழங்குகிறது.



## உங்களுக்குத் தெரியுமா?

- பண வீக்கத்தைச் சமாளிக்கவும், பொருட்களின் தரத்தை மேம்படுத்தவும் உணவுக்கான பட்ஜெட் கடந்த 5ஆண்டுகளில் 2020 முதல் 2025வரையில் 35% அதிகரித்துள்ளது.

- உணவினால் ஏற்படும் ஒவ்வாமை உள்ள குழந்தைகள் பள்ளி மருத்துவரால் தீர்மானிக்கப்பட்ட தனிப்பட்ட வரவேற்புத் திட்டம் (Protocole d'accueil individualisé (PAI) )நடைமுறைக்கு வந்தபின் தங்கள் தனிப்பட்ட உணவுப் பையுடன் உணவகங்களில் அனுமதிக்கப்டுவர். அதற்காக, சம்மந்தப்பட்ட குழந்தைகளுக்கு கல்வியாண்டு 2024-2025 ஆரம்பத்தில் நகராட்சியால் ஒரு லஞ்ச்பாக்ஸ் வழங்கப்பட்டுள்ளது.

**மத்திய சமையலறை பற்றி மேலும் தெரிந்து கொள்ள:**

## சிறந்த மற்றும் பாராட்டப் பெற்ற தரம்

Un Plus Bio (சிறிது கூடுதலான பயோ) சங்கத்தால் நடத்தப்பட்ட புரட்சிகரமான உணவகங்கள் போட்டியில் சேந்-தெனிஸ் நடுவர்களின் பரிசை 2023ஆம் ஆண்டிற்காக வென்றுள்ளது.




**அந்த நிகழ்ச்சி வீடியோவில் (2023) :**



**2025ல் சேந்-தெனிஸ் நகரமானது :**

- > Un Plus Bio சங்கத்தால் உணவுத் தலைநகரம் என்றழைக்கப்பட்டது
- > School food 4 change (SF4C) வினால் சிறப்புப் பரிசு
- > காரட் 1 சமையலில் எகோசெர்ட் சான்றிதழ், பல சிறப்பம்சங்களுடன்
- > ஈல்-த-ஃப்ரான்ஸ் பகுதி மற்றும் பாரிஸ் பெரு நகர இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பால் பயோ மற்றும் உள்ளூர் பொருட்களைப் பயன்படுத்தும் உணவுத் திட்டம் சிறப்புப் பரிசு.
- > ஈல்-த-ஃப்ரான்ஸ் பகுதி யில் கழிவின்மைக்கான பரிசு.

| 47 | 170 | 182 |
|---|---|---|
| உணவுத் துறை ஊழியர்கள் மத்திய சமையலறையில் வேலை செய்கிறார்கள். | மில்லியன் சாப்பாடுகள் ஆண்டு தோறும் மத்திய சமையலறையில் திட்டமிடப்பட்டு, சமைத்து விநியோகிக்கப்படுகின்றன | உணவுத் துறை ஊழியர்கள் பள்ளிகளில் உள்ள 48 உணவகங்களில் பணி புரிகிறார்கள் |

Juillet 2025 • © Mairie de Saint-Denis • Photos : Ville de Saint-Denis - Adobe Stock • Impression : Reprographie municipale